1990 மே 3] [திரு. ஜெ. அசேன்]

இருக்கிறது. என்வே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், அந்த 35 பேரும் பதவி உயர்வு பெறுவதற்கு நீங்கள் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறு கிறேன், வணக்கம்.

6. அரசினர் தீர்மானம்.

விதி 32-ஐத் தளர்த்துல்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

" ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப் பெறவேண் டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ நாளை (4-5-1990) தளர்த்த வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒரு மனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (4-5-1990) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்,

பின்னர் பேரவை பிற்பகல் 13-08 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

86. தமிழ்நாடு குழாய்க் கிணறுகள் கழகத்தின் 1987-88 ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

87. தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 1988-89 ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

159. கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91. (தமிழ், ஆங்கிலம்).

160. தமிழ்நாடு காவல் துறை மீதான ஆய்வுரை, 1989-90. (தமிழ். ஆங்கிலம்).

161. கோரிக்கை எண். 16—தமிழ்நாடு தீயணைப்புத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91. (தமிழ், ஆங்கிலம்).

162. 'நீர் வளமும் பாசனத் திட்டங்களும், 1990' என்கிற புத்தகம். (தமிழ்).

163. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தேழாவது அறிக்கை, 1989-90.

164. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தெட்டாவது அறிக்கை, 1989-90.

165. மனுக்கள் குழுவின் முதலாவது அறிக்கை, 1989-90.